(எட்டாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 1(2).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2015 ஒற்றோபர் 23 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2015 நவெம்பர் 03, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

16/ '15

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சமூக வலுவூட்டல் மற்றும் நலன்புரி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வாழ்வின் எழுச்சி நிதியத்திற்குச் சொந்தமான ரூபா 3000 மில்லியன் தொகை 2015 சனாதிபதி தேர்தலை அடிப்படையாகக்கொண்டு 2014 நவெம்பர் 02 ஆந் திகதி தொடக்கம் 2014 நவெம்பர் 09 ஆந் திகதி வரையான 07 நாட்களுக்குள் முறைகேடாகக் கையாளப்பட்டமை தொடர்பில் அதற்கெதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை;

(ii) அது சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதா;

(iii) இற்றைவரை வழக்கு தொடரப்பட்டிராவிடின் மேற்படி புலன்விசாரணையின் தற்போதைய முன்னேற்றம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அதன் மூலமாக வாழ்வின் எழுச்சி நிதியம் இழந்த ரூபா 3000 மில்லியன் பணத்தொகை சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை;

(ii) அரசாங்கத்திற்குச் சொந்தமான பல்வேறு நிதியங்களை இவ்விதமாக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர்கள் எவ்விதமான அமைச்சரவைத் தீர்மானமும் இல்லாமல் தமது தற்றுணிபின் பிரகாரம் நாசமாக்க வாய்ப்பு கிடைத்தமை பாதகமான ஒரு முன்னுதாரணமாக அமைவதால் எதிர்காலத்தில் இத்தகையவற்றைத் தடுக்க விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரென்ற வகையில் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இத்தகைய நிதிசார் குற்றங்கள் சம்பந்தமான புலனாய்வுகள் தொடர்பில் நீதிமன்றச் செயற்பாடுகளை துரிதமாக்கும் பொருட்டு அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு வெளிப்படுத்துவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

37/ '15

கௌரவ புத்திக பத்திறண,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வைப்புக்களுக்கான வட்டி மற்றும் கடன்கள் மீதான வட்டி வீதங்கள் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டபோதிலும், வணிக வங்கிகள் தமது கடன் அட்டைகள் மீதான வட்டி வீதங்களை மிக உயர் மட்டத்தில் பேணிவருகின்றன என்பதையும்;

(ii) மேற்படி நிலமையினால் வாடிக்கையாளர்கள் சுரண்டலுக்கு உள்ளாக்கப் படுகின்றார்கள் என்பதையும்;

(iii) இந்நாட்டு வங்கிகளில் மேலதிக திரவத்தன்மை காணப்படுகின்றதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடன் அட்டைகள் மீதான வட்டியைக் குறைப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(ii) வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களை உயர்த்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்கின்றதா;

(ii) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை;

(iii) மேற்படி ஒருங்கிணைப்பு மேற்கொள்ளப்படும் திகதி யாது;

(iv) வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களை ஒருங்கிணைப்பதன் மூலம் அரசாங்கம் எதிர்பார்ப்பது யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

86/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(ஆ) (i) தேயிலைக் கொழுந்தின் விலை துரிதமாக வீழ்ச்சி அடைந்துள்ள காரணத்தால் இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதோடு குறிப்பாக, சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துள்ளார்கள் என்பதையும்;

(ii) தற்போது ஒரு கிலோ பச்சைக் கொழுந்துக்கென செலுத்தும் விலை ரூபா 54/- வரை வீழ்ச்சி அடைந்துள்ளது என்பதையும்;

(iii) ஒரு கிலோ பச்சைக் கொழுந்துக்கென செலுத்தும் விலை ரூபா 50/- ஆகக் குறைவடையுமாயின் இலங்கையின் சகல தேயிலை தொழிற்சாலைகளும் மூடப்படும் அபாயம் உள்ளது என்பதையும்;

(iv) கடந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் தேயிலைக் கொழுந்துக்கென ரூபா 80/- உத்தரவாத விலை வழங்கப்படுமென குறிப்பிட்டுள்ளபோதிலும் தற்போது அது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இந்த நெருக்கடி நிலை காரணமாக கடந்த மாதத்தில் மூடப்பட்டுள்ள தேயிலை தொழிற்சாலைகள் தொடர்பான அறிக்கையொன்றை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) தேயிலைக் கைத்தொழில் இவ்வாறு ஆபத்தை நோக்கிச் செல்வதில் தாக்கம் செலுத்திய மற்றும் இப்போது கூட தாக்கம் செலுத்துகின்ற ஏதுக்கள் யாவை என்பதையும்;

(ii) தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் அது சார்ந்த தொழில்களை மேற்கொள்ளும் மில்லியன் கணக்கான மக்களைக் காப்பாற்ற கடைப்பிடிக்க எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

88/ '15

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— நீதி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கைச் சட்டக் கல்லூரியின் கற்கை நடவடிக்கைகளும் பரீட்சை நடவடிக்கைகளும் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம்பெறுகின்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் சட்டக் கல்லூரி மாணவர்களின் பரீட்சை வினாத் தாள்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததால் சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற மாணவர்களுக்கு திடீரென ஆங்கில மொழிக்கு மாற வேண்டிய நிலை ஏற்பட்டமையால் அம் மாணவர்களுக்கு பெரும் அநீதியும் சிரமமும் ஏற்பட்டதென்பதையும்;

(ii) இந்த விடயத்தினால் முன்னாள் பிரதம நீதியரசர் அரச கரும மொழிக் கொள்கையை மீறியுள்ளாரென்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) இனி வரும் காலங்களில் சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற வினாத் தாள்கள் அரச கரும மொழிக் கொள்கைக்கமைய, சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்குவாரா என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

127/ '15

கௌரவ விஜித ஹேரத்,— கௌரவ காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹட்டன் நகரத்தின் தும்புறுகிரிய பிரதேசத்தில் உலக வங்கியின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட வீடுகளில் சுமார் 35 சிங்கள், தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்கள், 33 வருடங்களுக்கும் மேல் குடியமர்ந்துள்ளார்கள் என்பதையும்;

(ii) மேற்படி குடியிருப்பாளர்களில் ஒரு பகுதியினருக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் சட்டபூர்வமான காணி உறுதிகள் கையளிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) வட்டவல பெருந்தோட்டக் கம்பனி இவர்களை வீடுகளிலிருந்து அகற்றி, மேற்படி காணிப் பிரதேசத்தை கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்வதற்காக நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஹட்டன் – டிக்கோயா நகர சபை மேற்படி குடியிருப்பாளர்கள் வசிக்கின்ற காணியை சுவீகரித்துக் கொள்வதற்கு ஏகமனதாக பிரேரணையொன்றை நிறைவேற்றியுள்ளது என்பதையும்;

(ii) இக்காணிப் பிரதேசத்தை கம்பனிக்கு சுவீகரித்துக் கொள்வதைத் தடுத்து நியாயத்தை நிறைவேற்றுவதற்காக மேற்படி குடியிருப்பாளர்கள், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, காணி சீர்திருத்த ஆணைக்குழு மற்றும் சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளை விழிப்புணர்வூட்டியுள்ளார்கள் என்பதையும்;

அவர் மேலும் அறிவாரா?

(இ) (i) இந்த விடயங்களைக் கவனத்தில் கொண்டு வட்டவல கம்பனியின் அழுத்தங்களிலிருந்து மேற்படி குடியிருப்பாளர்களை விடுவித்து இவர்களின் வீட்டு உரிமையை உறுதி செய்துகொடுக்கும் பொருட்டு தலையீடு செய்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

153/ '15

கௌரவ எம்.எச்.எம். சல்மான்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தோட்டப்புற தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கு பாடசாலைகளின் அடிப்படையில் ஆசிரிய உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டதையடுத்து, அகலவத்தை, வியன்கல்ல, 25 /2 ஆம் இலக்க வீட்டில் வசிக்கும் திருமதி. எவ். ருஷானா மபூர் விண்ணப்பப் பத்திரமொன்றைச் சமர்ப்பித்தார் என்பதையும்;

(ii) அதன் பிரகாரம் அவர் நேர்முகப் பரீட்சையின் நிமித்தம் 2015.03.02 ஆம் திகதி அழைப்பு இக்கம் 199 (B) யின் கீழ் தோற்றினார் என்பதையும்;

(iii) இவர் வசிக்கும் பிரதேசத்தின் தோட்டப்புற பாடசாலைகளில் மேற்படி பதவிக்கான வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் திருமதி. ருஷானா மபூருக்கு இதுவரை ஆசிரிய உதவியாளர் நியமனம் வழங்கப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) இவருக்கு ஆசிரிய உதவியாளர் நியமனத்தைத் தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

38/ '15

கௌரவ புத்திக பத்திறண,— சுகாதார, சுதேச மருத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான 05 ஆண்டு காலத்தினுள் விசர்நாய்க் கடி நோய் பீடிக்கப்பட்ட இலங்கையர்களின் எண்ணிக்கை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஐந்து ஆண்டுகளினுள் விசர்நாய்க் கடி நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக அரசாங்கம் செலவிட்ட பணத்தொகை வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) இது மொத்த சுகாதார செலவினத்தின் சதவீதமாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) விசர்நாய்க்கடி நோயை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்தகைய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

90/ '15

கௌரவ வாசுதேவ நாணயக்கார,— பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர்நீதிமன்ற நீதிபதி கௌரவ சிராணி திலகவர்தனவின் தலைமையில் நியமிக்கப்பட்ட ஆயுதக் கடத்தல் தொடர்பாக ஆராய்வதற்கான ஆணைக்குழுவின் அறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையை வெளியிடுவாரா என்பதையும்;

(iii) வெளியிடுவதாயின், அது எப்போதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

39/ '15

கௌரவ புத்திக பத்திறண,— வெளிநாட்டு தொழில்வாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை (மேற்படி இரண்டு ஆண்டுகளையும் உள்ளிட்டதாக) 5 ஆண்டுகளினுள் மத்தியகிழக்கு நாடுகளில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு இலக்காகிய பெண்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் தனித்தனியாக எவ்வளவு;

(ii) அப்பெண்கள் பணியாற்றிய மத்தியகிழக்கு நாடுகள் யாவை;

(iii) மேற்படி பெண்களுக்காக அந்நாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் ஊடாக மேற்கொண்ட நடவடிக்கைகள் ஒவ்வொரு பெண் தொடர்பிலும் தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி பாலியல் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அத்தகைய ஒவ்வொரு ஆளுக்கும் எதிராக மேற்கொண்ட நடவடிக்கைகைள் தனித்தனியாக யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாடுகளுக்கு செல்கின்ற இலங்கைப் பெண்களின் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை;

(iii) இலங்கைப் பெண்கள் வீட்டுப் பணிகளுக்காக வெளிநாடு செல்வதை மட்டுப்படுத்த மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நிதி அமைச்சர்,— மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— (52ஆவது அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 32 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 25 ஆம் பிரிவின் கீழ், மதுவரி உரிமம் தொடர்பில், நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதிய 1901/19 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2015.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

*

அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்,— இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுடனும் மற்றும் 14 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2015 யூன் மாதம் 11 ஆம் திகதிய 1918/22 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும், 2015.10.20 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2015 நவெம்பர் 04, புதன்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

42/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் வருடாந்த சந்தனக் குச்சி மற்றும் நறுமணப் புகைத் தூள் பாவனை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) இத்தொகையில் இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற மற்றும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்ற அளவு வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சந்தனக் குச்சி மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் மூலப்பொருட்கள் தனித்தனியாக யாவையென்பதையும்;

(ii) இந்த மூலப்பொருட்கள் மனித உடலுக்கு பாதகமானதா இல்லையா என்பதைப் பற்றி பரிசோதிப்பதற்கு நாட்டில் நிறுவனமொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(iv) இந்நிறுவனத்தினால் பரிசோதிக்கப்படுகின்றபோது மனித உடலுக்கு தீங்கு விளைவிக்கும் மூலப்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு சந்தனக் குச்சிகள் மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சந்தனக் குச்சிகள் மற்றும் நறுமணப் புகைத் தூள் உற்பத்தியின்போது மனித உடலுக்கு பாதகமான இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

91/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் சீமெந்தின் விற்பனை விலையினுள் உள்ளடங்கியிருந்த ரூபா 90.00 வரி அகற்றப்பட்டது சீமெந்தின் விலையைக் குறைப்பதற்கானதொரு வழிமுறையல்ல என்பதையும்;

(ii) இதன் காரணமாக மாதமொன்றுக்கு அரசாங்கம் இழந்த வரி வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி விலை குறைப்பு 2015 பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு, சில்லறை விலை ரூபா 840.00 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அன்று முதல் இன்று வரை குறித்த விலையில் நாடளாவிய ரீதியில் சீமெந்து விற்பனை செய்யப்படுகின்றதா என்பதையும்;

(iii) இன்றேல், அரசாங்கத்தின் வருவாயும் இழக்கப்பட்டு நுகர்வோருக்கு அளிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட நிவாரணமும் கிடைக்கப்பெறாமை பாரிய ஒரு தவறாக அமையாதா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இடைக்கால வரவு – செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மேற்படி விலை குறைப்பை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறிப்பிட்ட நடவடிக்கை அமுல்படுத்தப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

148/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) விஞ்ஞானம், தொழில்நுட்பம், வணிகவியல் மற்றும் கலை ஆகிய நான்கு பாடத்திட்டங்களின் கீழ் தற்சமயம் அண்ணளவாக இரண்டாயிரம் மாணவர்கள் கல்வி கற்கும் மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயம் பெரும் கட்டிட இட நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதென்பதையும்;

(ii) விடுதி, கேட்போர்கூடம் மற்றும் புதிய மூன்று மாடிக் கட்டிட நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கடந்த சனவரி மாதம் 15 ஆம் திகதி முதல் மேற்படி அனைத்து நிர்மாணிப்புகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) விளையாட்டு மைதானத்திற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட போதிலும், இதன் நிர்மாணிப்புகள் தாமதமடைந்துள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வித்தியாலயத்தின் விடுதியை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனின், அத்திகதி யாதென்பதையும்;

(iii) நிறுத்தப்பட்டுள்ள ஏனைய நிர்மாணிப்புகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்;

(iv) ஆயிரக்கணக்கான பிள்ளைகளுக்கு அத்தியாவசியமான விளையாட்டு வசதிகளுக்கான மைதானத்தை அமைத்துக்கொடுப்பாரா என்பதையும்;

(v) இன்றேல், ஏன் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) மாத்தறை மஹிந்த ராஜபக்ஷ வித்தியாலயத்தை மூடுவதற்கு முயற்சி செய்யப்படுவதாக பரவும் தகவல் உண்மையானதா பொய்யானதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

43/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இறைச்சிக்காக வளர்க்கப்படுகின்ற புரொய்லர் கோழிகளின் சுகாதார நிலைமை பற்றிய சிக்கல்கள் உள்ளதென்பதையும்;

(ii) பண்ணை உரிமையாளர்கள் உரிய நாட்களுக்கு முன்னர் இக்கோழிகளை இறைச்சிக்காக அறுக்கின்றனர் என்பதையும்;

(iii) இக்கோழிகள் துரிதமாக வளரும் பொருட்டு பயன்படுத்தப்படுகின்ற மருந்து வகைகளும் உணவுகளும் மனித உடலுக்கு தீங்கானது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் இறைச்சிக்காக புரொய்லர் கோழிகள் வளர்க்கப்படுகின்ற பண்ணைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இப்பண்ணைகளிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) 2014 ஆம் ஆண்டு கோழி இறைச்சி உற்பத்தி (கிலோகிராம்) யாதென்பதையும்;

(iv) அதன் பிரகாரம் தலா கோழி இறைச்சி நுகர்வு யாதென்பதையும்

தனித்தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (அ)வில் குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

92/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) படை உறுப்பினர்களது பிள்ளைகளுக்காக ஒதுக்கப்பட்ட பாடசாலைகள் தனியாகப் பேணிவரப் படுகின்ற கொள்கையை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(ஆ) இராணுவத்தின் தியாகிகளான, உத்தியோகத்தர்கள் மற்றும் படைவீரர்கள் ஆகிய இரு பிரிவினருக்கும் சிறப்புரிமைகளை பெற்றுக்கொடுத்தல் அவசியமாயிருந்த போதிலும் இவர்களின் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகள் காணப்படுவதன் மூலம் சமூகத்தில் புதிய சமூக வகுப்பொன்றின் அடிப்படையில் வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்?

(இ) (i) மேற்படி பாடசாலைகளில் உள்ள உத்தியோகத்தர்களின் பிள்ளைகள் மற்றும் படைவீரர்களின் பிள்ளைகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) இத்தகைய பாடசாலைகளை கல்வித் திணைக்களத்தின் கீழ் கொண்டுவந்து ஏனைய மாணவர்களையும் சேர்த்துக்கொண்டு பேணிவருவதையிட்டு பரிசீலிக்காமைக்கான காரணம் யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

44/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்ஷபான நீர்வீழ்ச்சிக்கு மேற்பகுதியில் மஸ்கெலி ஓயாவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மற்றும் நிர்மாணிக்கப்பட்டுவரும் மின் உற்பத்தி நிலையங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) இந்த மின் உற்பத்தி நிலையங்கள் காரணமாக சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக சுற்றாடல் ஆய்வு அறிக்கையொன்று கோரப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அந்த அறிக்கைகளை இச் சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) லக்ஷபான நீர்வீழ்ச்சிக்கு மேற்படி மின் உற்பத்தி நிலையங்களினால் சேதம் ஏற்படலாம் என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய சேதங்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) அந்த நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 நவெம்பர் 05, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

45/ '15

கௌரவ புத்திக பத்திறண,— மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் இயங்கி வந்த அம்பாந்தோட்டை வாடி வீடு தனியார் துறைக்கு உரித்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அங்கு பணியாற்றிய ஊழியர்கள் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(iii) இச் செயற்பாடு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு நிதி சார்ந்தவொரு நட்டம் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த வாடி வீட்டினை மீண்டும் நகர அபிவிருத்தி அதிகார சபை சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

130/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமாக இருந்த ரேஸ்கோஸ் மைதானமானது சுற்றிலுமுள்ள சுமார் 10 பாடசாலைகளுக்கு விளையாட்டு விழாக்களை நடத்துவதற்கான வசதிகளை வழங்கிய ஒரு இடமாகுமென்பதையும்;

(ii) தற்போது குறிப்பிட்ட பாடசாலைகள் அவ்வசதிகளை இழந்துள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கொழும்பு மாநகர சபைக்குச் சொந்தமாகவிருந்த ரேஸ்கோஸ் மைதானத்தின் இன்றைய உரிமையாளர்கள் யாவர் என்பதையும்;

(ii) இதனைக் கைப்பற்றியுள்ள ஆட்கள் அல்லது நிறுவனங்கள் மேற்படி காணி சார்பாக நகர சபைக்குச் செலுத்தியுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iii) விளையாட்டு மைதானத்தை இழந்துள்ள மேற்படி பாடசாலை மாணவர்கள் சார்பாக தற்போது மேற்படி வசதிகள் எவ்வகையில் வழங்கப்படுகின்றன என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

149/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச ஊழியர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வாண்டு மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) ஒவ்வொரு நிறுவனத்தின் அடிப்படையில் மோட்டார் சைக்கிள்கள் பெற்றுக்கொடுக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) கடந்த சனாதிபதித் தேர்தலில் வாக்குறுதியளிக்கப்பட்டவாறு, மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் (ரூபா 50,000) தொகை திருப்பிக்கொடுக்கப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மோட்டார் சைக்கிள்களுக்காக அறவிடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் தொகை திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ள ஊழியர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அரச ஊழியர்களுக்கு இலவசமாக மோட்டார் சைக்கிள் பெற்றுக்கொடுக்கும் வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இற்றைவரை அறவிடப்பட்ட ரூபா ஐம்பதாயிரம் தொகையை சகலருக்கும் திருப்பிக் கொடுக்கும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

46/ '15

கௌரவ புத்திக பத்திரண,— உள்ளக அலுவல்கள், வடமேல் மாகாண அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994.02.26 ஆம் திகதியன்று கலாசார உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) 1998.06.23 ஆம் திகதியன்று மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் கலாசார உத்தியோகத்தர்களாக ஆட்சேர்க்கப்பட்டார்கள் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கலாசார உத்தியோகத்தர்கள் கலாசார உதவிப் பணிப்பாளர் பதவிக்கு பதவி உயர்வு பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள மற்றும் பதவி உயர்வுகள் கிடைக்கப்பெறாத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வுகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அத் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

131/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த அரசாங்கத்தினால் அரச வங்கிகளின் மூலம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை பதிவழிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்ட மாவட்டங்கள் யாவையென்பதையும்;

(iii) அந்தத் தீர்மானம் இரத்தினபுரி மாவட்டத்தில் இதுவரை நடைமுறைப்படுத்தப் படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

47/ '15

கௌரவ புத்திக பத்திரண,— வலுவாதார அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வில்பத்து சரணாலயப் பிரதேசத்தின் உயர் கூருணர் வலயத்தில் வசிக்கும் மக்களை அங்கிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது;

(iii) மேற்படி மக்களுக்கு வேறு இடங்களில் காணிகள் வழங்கப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சரணாலயப் பிரதேசத்தில் வசிப்போருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், குறித்த நடவடிக்கைகள் யாவை;

(iii) குற்றவாளிகளின் பெயர், முகவரி மற்றும் பதவிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2015 நவெம்பர் 06, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

48/ '15

கௌரவ புத்திக பத்திரண,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வர்த்தகர்களின் சூழ்ச்சியான மூலோபாயங்கள் காரணமாக கறுவா கைத்தொழில் வீழ்ச்சியடையும் அபாயம் காணப்படுகின்றதென்பதையும்;

(ii) தரத்தில் குறைந்த கறுவா உற்பத்திகள் ஏற்றுமதி செய்யப்பட்ட பின்னர் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மேற்படி நிலைமை இலங்கையின் நற்பெயருக்கு பெரும் பாதகமாகும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டில் ஏற்றுமதியின் பின்னர் தரத்தில் குறைவாயுள்ளமையால் மீண்டும் திருப்பி அனுப்பப்பட்ட கறுவா உற்பத்திகள் யாவை என்பதையும்;

(ii) அவற்றின் அளவு மற்றும் பெறுமதி தனித்தனியே யாதென்பதையும்;

(iii) மேற்படி உற்பத்திகளை ஏற்றுமதி செய்தவர் யாரென்பதையும்;

(iv) மேற்படி நபரின் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) ஏற்றுமதி செய்யப்படும் கறுவா உற்பத்திகளின் தரத்தை பரிசோதிப்பதற்கு தற்போது எடுக்கப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

(ii) தரமற்ற கறுவா ஏற்றுமதியை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் வழிமுறைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

132/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கூட்டுறவுச் சங்க இயக்கம் தொடர்பாக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கை அப்போதைய சனாதிபதியான சந்திரிகா குமாரணதுங்க அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கை இதுவரை வெளியிடப்படாதிருப்பின் அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) அதனை பொதுமக்களின் கைகளுக்குக் கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

150/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மலையக நெடுஞ்சாலையின் முதல் பகுதிக்கு கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் அடிக்கல் நாட்டப்பட்டதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மலையக நெடுஞ்சாலையின் முதல் பகுதிக்கு அடிக்கல் நாட்டப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆரம்பப் பகுதி ஆரம்பிக்கின்ற மற்றும் முடிவடைகின்ற இடங்கள் யாவை என்பதையும்;

(iii) அதன் மொத்த நீளம் யாது என்பதையும்;

(iv) முதல் பகுதிக்கான பாதைக்குரிய காணிகள் இனங்காணப்பட்டிருப்பின், அக்கிராமங்கள் மற்றும் நகரங்கள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) நிர்மாணிப்புக்குத் தேவையான சுற்றாடல் அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) சாத்தியக்கூறு கற்கை மேற்கொள்ளப்பட்ட திகதி யாது என்பதையும்;

(iii) இந்த நிர்மாணிப்புக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது என்பதையும்;

(iv) குறித்த தெரிவு மேற்கொள்ளப்பட்ட முறையியல் யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி பகுதிக்குத் தேவையான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டுள்ளதா என்பதையும்;

(ii) கடன் பெற்றுக் கொள்ளப்படும் நிறுவனம் யாது என்பதையும்;

(iii) கடன் தொகைக்கான வட்டி எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) (i) மலையக நெடுஞ்சாலையின் முதல் பகுதிக்குச் செலவாகும் மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அதற்கமைய ஒரு கிலோ மீற்றருக்குச் செலவாகும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஊ) இன்றேல், ஏன்?

49/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கிராமியப் பொருளாதார விவகாரங்கள் பற்றிய அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மில்கோ கம்பனியின் பால் மா உற்பத்தி வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) இதற்கமைய சந்தையில் ஹைலன்ட் பால் மா இல்லை என்பதையும்;

(iii) இது நுகர்வோருக்கும், கம்பனிக்கும் பாரிய இழப்பாகும் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2010.01.10 ஆம் திகதி முதல் 2014.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் மில்கோ கம்பனியின் பால் மா உற்பத்தி கிலோ கிராம்களில் வருடாந்த அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால் மாவின் அளவு கிலோ கிராம்களில் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மில்கோ கம்பனியின் பால் மா உற்பத்தியை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

133/ '15

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— பல்கலைக்கழகக் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பல்கலைக்கழகங்கள் அல்லாத நிறுவனங்களினால் நடத்தப்படும் பொறியியல், கணக்கீடு மற்றும் பிற தொழில்வாண்மை கற்கைநெறிகளின் எண்ணிக்கை நிறுவன ரீதியாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனங்கள் ஒவ்வொரு கற்கை நெறிக்காகவும் அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) பல்கலைக்கழக கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் கீழ்வரும் பல்கலைக்கழகங்களில் கட்டணம் அறிவிட்டு நடத்தப்படும் கற்கை நெறிகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு கற்கைநெறி மற்றும் கற்கை நெறிக்காக அறவிடும் கட்டணம் தனித்தனியாக யாது என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை மேற்படி கட்டணங்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

151/ '15

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கௌரவ பிரதம அமைச்சரும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 செப்தெம்பர் 30 ஆம் திகதியளவில் தொழிலற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி பட்டதாரிகளின் எண்ணிக்கை, அவர்கள் பெற்றுள்ள பட்டங்களுக்கு அமைய தனித்தனியே யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதற்காக தற்போதைய அரசாங்கத்திடம் காணப்படுகின்ற வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அதற்கமைய 2015 ஆம் ஆண்டுக்காக ஆட்சேர்ப்பதற்கு எதிர்பார்த்துள்ள பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது பதியப்பட்டுள்ளவாறு அரச சேவையின் பட்டதாரிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) 2015 முதல் 2019 வரையான ஐந்து ஆண்டுகளினுள் பல்கலைக்கழகங்களின் ஊடாகவும், வெளிவாரிப் பாடநெறிகளின் மூலமும் பட்டம் பெறவுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி ஆண்டுகளுக்கு அரச சேவையில் இவர்களுக்காக உருவாக்கப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

52/ '15

கௌரவ புத்திக பத்திறண,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர்தர வகுப்புகளுக்கு மாணவிகளை அனுமதிப்பதற்காக கவனத்திற் கொள்ளப்படுகின்ற அளவுகோள்கள் யாவை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டில் கொழும்பு விசாகா வித்தியாலயத்தில் உயர் தர வகுப்புக்களுக்கு அனுமதிக்கப்பட்ட மாணவிகள் கல்வி கற்பதற்குள்ள பாடப் பிரிவுகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பாடப் பிரிவு தொடர்பாகவும், புதிய உயர் தர மாணவிகளுக்குள்ள வகுப்புக்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு வகுப்பிலும் இருக்கின்ற மாணவிகளின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(v) 2015 ஆம் ஆண்டில் உயர் தரம் கற்பதற்காக கொழும்பு விசாகா வித்தியாலயத்திற்கு வேறு வித்தியாலயங்களிலிருந்து அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ) (v) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு மாணவியினதும் பெயர், மாவட்டம், க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய பாடசாலை மற்றும் உயர்தர பரீட்சைக்காக கல்வி கற்கின்ற பாடப் பிரிவு ஆகியன தனித்தனியே யாவை என்பதையும்;

(ii) விசாகா கல்லூரிக்கு அனுமதி பெறுவதற்காக மேற்படி ஒவ்வொரு மாணவிக்கும் காணப்பட்ட தகைமைகள் தனித்தனியே யாவை என்பதையும்;

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

*

நீதி அமைச்சரும் புத்தசாசன அமைச்சரும்,— இலங்கையில் துரிதமாக அதிகரித்து வருகின்ற குற்றங்களைத் தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படக்கூடிய தாமதங்களைத் தவிர்த்தல் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கையில் அதிகரித்து வருகின்ற குற்றங்களை தடுத்தல் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்த்தல் என்பன இந்நாட்டு மக்களின் முதன்மையான தேவையாக மாறியுள்ளதாலும்,

அது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி தீர்வு காண்பதற்கான பொறுப்பு இப் பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும்,

பின்வரும் விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்து தகுந்த விதப்புரைகளை சமர்ப்பிக்கும் பொருட்டு பாராளுமன்ற தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது:—

(அ) கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்களின் இயல்பு, அவ்வாறு குற்றங்கள் இடம்பெறுவதற்கு ஏதுவாயமைந்த விடயங்கள், குற்றச் செயல்களைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் மற்றும் தேவையான சட்ட ஏற்பாடுகள் மற்றும்/அல்லது திருத்தங்களை சமர்ப்பித்தல்,

(ஆ) குடியியல் மற்றும் குற்றவியல் வழக்குகளில் ஏற்படக்கூடிய தாமதங்களை தவிர்க்கும் பொருட்டு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் மற்றும் புதிதாக விதிக்கப்பட வேண்டிய மற்றும்/அல்லது திருத்தங்களுக்குட்பட வேண்டிய சட்ட விதிகள் யாவை என்பதை விதந்துரைத்தல், மற்றும்

(இ) மேற்படி விடயங்களுக்கு இடைநேர்விளைவான மற்றும் குறித்த சந்தர்ப்பங்களின் போது அவசியமானதெனவும் பொருத்தமானதெனவும் குழு கருதுகின்றதும் குழுவினால் பரிசீலனை செய்யப்படுகின்ற விடயங்களுக்கு தாக்கம் செலுத்துகின்றதுமான வேறு விடயங்கள் தொடர்பிலான விதப்புரைகளைச் சமர்ப்பித்தல்.

02. (அ) மேற்படி குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் இலக்கம் 95 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு இருபத்தொரு (21) உறுப்பினர்களை விஞ்சாத எண்ணிக்கையை கொண்டிருத்தல் வேண்டும்.

03. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை தீர்மானிப்பதற்கு;

(ஆ) ஆட்கள், ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை வரவழைப்பதற்கு, பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழு முன்னிலையில் தோற்றுமாறு எந்தவொரு ஆளுக்கும் கட்டளையிடுவதற்கு, அத்தகைய ஆட்கள் வசம் அல்லது கட்டுப்பாட்டில் காணப்படுகின்ற ஏதேனும் கடிதம், புத்தகம், அறிக்கை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கு;

(இ) சாட்சியாளர்களை வாய்மொழி மூல விசாரணைக்கு உட்படுத்துவதன் மூலம் உண்மைத்தன்மையினை விசாரித்தறிவதற்கு அல்லது வேறு விதத்தில் உறுதி செய்து கொள்வதற்கு, குழுவின் தவிசாளர் அல்லது குறித்த பணிக்காக விசேடமாக அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஆளொருவரால் உறுதிப்பிரமாணம் அல்லது சத்தியப்பிரமாணம் பெறப்பட்ட சாட்சியாளர்களை விசாரிப்பதற்கு;

(ஈ) குழுவுக்கு உதவி புரிவதற்கென ஏற்புடைய துறைகளின் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெறுவதற்கு;

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளை சமர்ப்பிப்பதற்கு, அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தொடர்ந்து கூட்டங்களை நடாத்திச் செல்வதற்கு;

தத்துவமுடையதாதல் வேண்டும்.

4. குழுவானது, தனது முதலாவது கூட்டம் நடத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு (06) மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றத்தினால் தொடர்ந்தும் வழங்கப்படும் வேறு எந்தவொரு காலகட்டத்தினுள்ளும் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.